## உளுந்தின் விலை உயரும்

இந்தியா, சீனா, பிரேசில், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் பருப்பு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உலகளவில், பருப்பு உற்பத்தி, நுகர்வு மற்றும் இறக்குமதியில் இந்தியா பெரும்பங்கு வகிக்கிறது.

பொருளியியல் மற்றும் புள்ளியியல் அமைச்சகத்தின் படி, 2014-15ல் உளுந்து 3.2 மில்லியன் எக்டர் பரப்பளவில், 1.86 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்ட்ரா ஆகிய ஐந்து மாநிலங்களும் உளுந்து உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்வைந்து மாநிலங்களும் நாட்டின் மொத்த உளுந்து உற்பத்தியில் 65 சதவிகிதம் பங்களிக்கின்றன. இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் தாய்லாந்து உளுந்தை அதிக நுகர்வு மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளாகும்.

குறைவான மழை மற்றும் மாற்றுப் பயிர் செய்தல் காரணமாக உற்பத்தி குறைந்ததால், உளுந்தின் விலை உயர்வடைந்துள்ளது. உள்நாட்டு தட்டுப்பாட்டின் காரணமாக அறுவடை சமயத்திலும் அதிக விலைப் பெற வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில், 2014-15ல் உளுந்து 4.0 மில்லியன் எக்டர் பரப்பளவில் 2.65 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளில் நெல் தரிசாக பருப்பு விளைவிப்பது இன்றும் நடைமுறையில் உள்ளது. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உளுந்து அதிகம் பயிரிப்படுகின்றது. ஏடிடீ3, ஏடிடீ 5 மற்றும் டீ9 ஆகியவை முக்கியமாக பயிரிப்படும் இரகங்களாகும்.

உளுந்து விற்பனையில் ஒரு சரியான முடிவை எடுத்து விவசாயிகளுக்கு உதவ, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் பின்புல அலுவலகம், விழுப்பும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 13 வருடங்களாக நிலவிய உளுந்து விலைகளை ஆய்வு செய்தது.

ஆய்வின் முடிவில், உளுந்து அறுவடையின் போது (ஏப்ரல் - மே) பண்ணை விலையாக கிலோவிற்கு ரூ.90 முதல் 95 வரை விலை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை மேற்கொள்ளலாம்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405.


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பயறுவகைத் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2450498